பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

24 08 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உலக அளவில் விரைவான பொருளாதார வளர்ச்சியடைந்து வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- சட்டப்பேரவைத் தலைவர்களின் இரண்டு நாள் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- தமிழ்நாட்டில் போலியோவை ஒழித்திட திமுக அரசின் நடவடிக்கைகளே காரணம் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- திமுக ஆட்சிக்கு வந்த கடந்த 4 ஆண்டுகளில் ஒரு மருத்துவக் கல்லூரி கூட மாநிலத்தில் கொண்டுவரப்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.
- உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலக அளவில் விரைவான பொருளாதார வளர்ச்சியடைந்து வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

விரைவில் 3வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுதில்லியில் தனியார் பத்திரிகை செய்தி நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், உலக பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு 20 சதவீதமாக உயரும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் பெரிய அளவில் பொருளாதார நிலைத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பணவீக்கம் மிக குறைவாக இருப்பதாகவும், அந்நிய முதலீடுகள் அதிக அளவில் உள்ளதால் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவில் உள்ள லட்சக்கணக்கான முதலீட்டாளர்கள் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மியூச்சுவல் ஃபண்ட் திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் முதலீடு செய்து வருவதாக பிரதமர் கூறினார்.

சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம் என்ற அடிப்படையில் கொள்கைகளை வகுத்து தமது அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் 60 விண்வெளித் திட்டங்களை வெற்றிகரமாக இந்தியா நிறைவேற்றி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியா திட்டம், சுயசார்பு இந்தியாவை வலுவாக்கி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தலைவர்களின் இரண்டு நாள் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.

புதுதில்லி சட்டப்பேரவையில் நடைபெறும் இந்த மாநாட்டில் 29 மாநிலங்களைச் சேர்ந்த சட்டப்பேரவைத் தலைவர்கள் மற்றும் 6 மாநிலங்களின் சட்டப்பேரவைத் துணைத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

இந்தியாவில் முதல் சட்டப்பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட Vitthal Bhai Patel-ன் நூற்றாண்டை ஒட்டி இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியில் Vitthal Bhai Patel குறித்த ஆவணப்படம் திரையிடப்பட உள்ளதாகவும், அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிடப்படும் என்றும் தில்லி சட்டப்பேரவைத்தலைவர் திரு. Vijender Gupta தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தலைமையில் நிறைவுநாள் நிகழ்ச்சி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் போலியோவை ஒழித்திட திமுக அரசின் நடவடிக்கைகளே காரணம் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் நேற்று நடைபெற்ற ரோட்டரி இந்தியா தலைமைத்துவ மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், ரோட்டரி சங்கமும், தமிழ்நாடு அரசும் இணைந்து செயலாற்றியதன் காரணமாக போலியோ நோய் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

ரோட்டரி சங்கம் 250 கோடி ரூபாய் மதிப்பிலான சமூக நலத் திட்டங்களை தொடங்கி வைப்பதற்கு அந்த அமைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மகளிருக்காக 100 பிங்க் ஆட்டோக்களும் வழங்கப்பட்டன.

அரசுப் பள்ளிகளில் "நம்ம ஊரு" பள்ளித் திட்டத்தில் மகளிர் உடல் நலத்திற்கான கருப்பை புற்றுநோய் தடுப்பு முகாம் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து செயல்படுத்த இருப்பது குறித்து அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சர்வதேச ரோட்டரி தலைவர் திரு. பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

திமுக ஆட்சிக்கு வந்த கடந்த 4 ஆண்டுகளில் ஒரு மருத்துவக் கல்லூரி கூட மாநிலத்தில் கொண்டுவரப்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருச்சியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அதிமுக ஆட்சியில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட்டு வரலாறு படைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கல்வியில் தமிழகம் சிறந்து விளங்க தமது அரசு எடுத்த முன் முயற்சிகள்தான் காரணம் என்றும் அவர் கூறினார்.

திமுக ஆட்சிய்ல் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது என்றும், மக்கள் கனவில் வீடு கட்ட முடியுமே தவிர, நிஜத்தில் வீடு கட்ட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

சிறுபான்மை மக்களுக்கு முழு பாதுகாப்பு கொடுக்கும் அரசாக தமது அரசு திகழ்ந்ததாக திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் சென்னை மாநகராட்சி அறிவுறுத்தியுள்ளது.

மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் தடுப்புகள் அமைக்காமல் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் அந்த ஒப்பந்ததாரர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது.

இதுகுறித்து பொதுமக்கள் 1 9 1 3 என்ற தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்கலாம் என்றும் கூறியுள்ளது.

<<<<>>>>

சேலத்தில் அரசுப் பள்ளி மாணவிகளுக்கான சிலம்பாட்டப் போட்டி நடைபெற்றது.

23 பிரிவுகளில் நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் கலந்துகொண்ட மாணவிகள் தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரி உயர்வை அடுத்து அந்நாட்டுக்கான தபால் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஜெர்மனி, டென்மார்க், ஸ்வீடன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

<<<<>>>>

ஃபிஜி பிரதமர் திரு. Sitiveni Rubuka 3 நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

<<<<>>>>

அமெரிக்காவில் நேரிட்ட பேருந்து விபத்தில் இந்தியர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

மிசோரம் தலைநகர் ஐஸ்வாலில் 127 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட உள்ள ஒற்றுமை வணிக வளாகத்திற்கு அம்மாநில முலமைச்சர் திரு. லால் தோமா அடிக்கல் நாட்டினார்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களை பதிவு செய்வதற்கான புதிய இணையதளத்தை அம்மாநில கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. Ashish Shelar தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திண்டுக்கல்லில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் மாநில அமைச்சர்கள் திரு. ஐ. பெரியசாமி, திரு. சக்கரபாணி ஆகியோர் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கான 6 நாள் மருத்துவக் கல்விப் பயிற்சி சென்னையில் நேற்று நிறைவடைந்தது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு செய்வது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா கலந்தாய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

ஓசூர்-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் நேற்று அடுத்தடுத்து 10க்கும் மேற்பட்ட வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<<<<>>>>

தமிழர்களின் வாழ்வியல் கலை, பண்பாடு உள்ளிட்ட நாட்டுப்புறக் கலைகளை எடுத்துக்கூறும் 2 நாள் சங்கமம் நிகழ்ச்சி திருநெல்வேலியில் நேற்று தொடங்கியது.

<<<<>>>>

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் கடந்த மாதம் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 520 டன் எல்.பி.ஜி. எரிவாயு கையாளப்பட்டுள்ளதாக அதன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

கனடாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 21 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் Chikita - தென்கொரியாவின் Park-ஐ வென்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

18 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் இந்தியாவின் Prithika Pradeep வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Prithika Pradeep - Mohit Dagar இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

<<<<>>>>

பல்கேரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhatacharjee அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 4-1 என்ற செட் கணக்கில் தைவானின் Guan Hong-ஐ வென்றார்.

**<<<<>>>>**

துரந்த் கால்பந்து போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி கோப்பையை கைப்பற்றியது.

ஜம்மு-கஷ்மீரின் ஸ்ரீநகரில் நடைபெற்ற கேலோ இந்தியா நீர் விளையாட்டுப் போட்டியில் மத்தியப்பிரதேசம் 10 தங்கம் உட்பட 18 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.

**<<<<>>>>**